## நாடகம் : சிறுவினா (கேள்வி 6)

**பயிற்சி 1**

**காட்சி 1 : மேற்படியாருக்குப் பதக்கத் தொங்கலை வழங்கியது.**

- மேற்படியார் தாமதமாக வருதல்.
- வீட்டில் வறுமை ஏற்பட்டதால் வர தாமதமானதாக பிசிராந்தையாரிடம் காரணம் கூறுதல்.
- வறுமை என்று வந்த மேற்படியாருக்குப் பதக்கத் தொங்கலைக் கழற்றிக் கொடுத்து உதவுகிறார் பிசிராந்தையார்.
- மேற்படியாரின் பொய்யை நம்பியதற்கான காரணத்தைக் கூறுகிறார் பிசிராந்தையார்.

1. கீழ்க்காணும் பகுதியை வாசித்து, தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

| | |
|---|---|
| பிசிராந்தையார் : | எல்லாரும் நல்லவர் இந்நாட்டில். எல்லாரும் செல்வர்கள் இந்த நாட்டில். அரிசி இல்லை என்று மேற்படியார் சொல்லியதை நம்பினேன் என்றால், ஏழைகள் ஒரு சிலர் தோன்றமாட்டார்களா என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தது என் உள்ளம். **ஏழமை தோன்றிற்று**. நம்பிவிட்டது என் உள்ளம். |
| புலவர் க : | ஏழைகள் இருக்க வேண்டுமா" எதற்காக ஐயா? |
| பிசிராந்தையார் : | எல்லாரும் நல்லவர் இந்த நாட்டில். எல்லாரும் செல்வர்கள் இந்நாட்டில். வாழ்வில் தொல்லை இல்லையே தவிர மனமகிழ்ச்சிக்கு வழியுண்டா? மேற்படியாரின் ஒரே ஒரு பொய்தானே நமக்கு விடா நகைப்பை உண்டாக்கிற்று? எல்லாரும் நல்லவர் இந்நாட்டில். எல்லாரும் செல்வர்கள் இந்நாட்டில், தீயவர் சிலர் இருக்க வேண்டும். ஏழைகள் சிலர் இருக்க வேண்டும். இல்லையானால் **மக்கள் இயக்கம் மரப்பாவை இயக்கம்.** |

(காட்சி 1, பக்கம் 4,5)

i) இச்சூழலில் வெளிப்படும் பிசிராந்தையாரின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

ii) இச்சூழலில் காணப்படும் **இடப்பின்னணி** யாது? (2 புள்ளி)

iii) **‘மக்கள் இயக்கம் மரப்பாவை இயக்கம்.’** என்பதன் சூழலுக்கேற்ற பொருள் யாது? (2 புள்ளி)

iv) இச்சூழலுக்கான **காரணம்** யாது? (3 புள்ளி)

**விடைகள் :**

**அ)** இரக்கக் குணம் உடையவர்,

பிறர் நலனில் அக்கறை கொண்டவர்,

நாட்டுப் பற்றுக் கொண்டவர்.

ஆ) பிசிராந்தையார் வீடு / பாண்டிய நாட்டில் ஒரு தெரு

இ) **ஏழமை தோன்றிற்று**

மேற்படியார் வறுமையில் வாடுவதாக பிசிராந்தையார் எண்ணியது.

**மக்கள் இயக்கம் மரப்பாவை இயக்கம்**

பாண்டிய நாட்டு மக்களின் செயல்பாடுகள் உணர்ச்சியற்றவைகளாக இருக்கும்.

ஈ)

- மேற்படியார் தாமதமாக வருதல்.
- வீட்டில் வறுமை ஏற்பட்டதால் வர தாமதமானதாக பிசிராந்தையாரிடம் காரணம் கூறுதல்.
- வறுமை என்று வந்த மேற்படியாருக்குப் பதக்கத் தொங்கலை கழற்றிக் கொடுத்து உதவுகிறார் பிசிராந்தையார்.
- மேற்படியாரின் பொய்யை நம்பியதற்கான காரணத்தைக் கூறுகிறார் பிசிராந்தையார்.

**பயிற்சி 2**

**காட்சி 4 : கொலை செய்யப்பட்ட பெண்ணின் உடலைக் கண்டு அரசி கலங்குதல்**

- கொலை செய்யப்பட்ட பெண்ணுடல் விசிப்பலகையில் வைக்கப்பட்டிருக்கிறது.
- பாண்டிய நாட்டு அரசி அவ்வுடலைக் கண்டு கலங்குகிறார்.
- அதற்குப் பிரிராந்தையார் அரசிக்கு ஆறுதல் கூறுகிறார்

கீழ்க்காணும் பகுதியை வாசித்து, தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

| | |
|---|---|
| பிசிராந்தையார் : | **சிலந்தி வலை மலையையா தாங்கும்**? செவ்விய உள்ளம் தீச்செயல் தாங்குமா? அரசியாரே! அம்மையாரே! விரைவில் நீங்கள் இவ்விடத்தைவிட்டு விலகவேண்டும். மாண்ட உடலை மருத்துவர் ஆராய வேண்டும். |
| அரசி : | உறவின் முறையார் ஒருத்தரும் இல்லையே! நாங்களும் பிரிவது நன்றோ ஐயோ! |
| பிசிராந்தையார் : | (உரத்த குரலில்)<br>தாங்காத துன்பத்தால் சாக விருப்பமா?<br>நீங்கி இருந்து நிலைக்க விருப்பமா?<br>(அனைவரும் ஒருபுறம் போக, மருத்துவப் பெண்டிர் வருகின்றார்கள். பிணத்தின் நிலை ஆராய்கிறார்கள்) |
| மருத்துவச்சி : | உடல் அழுகிவிட்டது. இன்னும் வைத்திருப்பது கூடாது. மேலும் வயிற்றுக்குள் இருந்த குழந்தையும் செத்துவிட்டது. அதையும் எடுக்க வேண்டும். |
| பிசிராந்தையார் : | தச்சுப் புலவரைக் கொண்டு இப்பிணம்போல் அச்செடுக்கச் செய்ய வேண்டும் வேலையைப் பாருங்கள். |

**(காட்சி 4, பக்கம் 22)**

I. இச்சூழலில் வெளிப்படும் பிசிராந்தையாரின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக.
(2 புள்ளி)

II. இச்சூழலில் இடம்பெறும் **சமுதாயப்பின்னணி** யாது? (2 புள்ளி)

III. **'சிலந்தி வலை மலையையா தாங்கும்'** என்பதன் சூழலுக்கேற்ற பொருள் யாது?
(2 புள்ளி)

IV. இச்சூழலுக்கான **காரணம்** யாது? (3 புள்ளி)

**விடைகள் :**

**அ)** இரக்கக் குணம் உடையவர்,

பிறர் நலனில் அக்கறை கொண்டவர்,

கடமையுணர்ச்சிக் கொண்டவர்.

ஆ) புலவர் சமுதாயம் / பிறர் நலத்தில் அக்கறை கொண்ட சமுதாயம்

இ) **சிலந்தி வலை மலையையா தாங்கும் –**

மெல்லிய உள்ளம் கொண்ட அரசி கொலை செய்யப்பட்ட பெண்ணின் உடலைக் காணும்போது ஏற்படுகின்ற துயரைத் தாங்க இயலாது

ஈ)

- கொலை செய்யப்பட்ட பெண்ணுடல் விசிப்பலகையில் வைக்கப்பட்டிருக்கிறது.
- பாண்டிய நாட்டு அரசி அவ்வுடலைக் கண்டு கலங்குகிறார்.
- அதற்குப் பிரிராந்தையார் அரசிக்கு ஆறுதல் கூறுகிறார்

**பயிற்சி 3**

**காட்சி 7 : அச்சப் பலகை முறிந்து யானை ஓடையில் விழுதல்**

- மேற்படியாரும் பிசிராந்தையாரும் நாட்டு மக்களின் நிலை குறித்துப் பேசிக் கொண்டிருக்கின்றனர்.
- அப்போது ஓடையைக் கடக்கப் போடப்பட்டிருந்த பலகை முறிந்து யானை ஒன்று ஓடையில் விழுகிறது.
- அதைச் சான்றாகக் காட்டி நாட்டின் மக்களின் நிலையைத் தெளிவாக விளக்குகிறார் பிசிராந்தையார்.

கீழ்க்காணும் பகுதியை வாசித்து, தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

| | |
|---|---|
| பிசிராந்தையார் | : அச்சப்பலகை ஆனையைத் தாங்கவில்லை மேற்படியாரே |
| மேற்படியார் | : நல்ல எடுத்துக் காட்டு, **மெலிந்த உள்ளம் வெம்மையைத் தாங்காது**. விளங்கிற்று. |
| பிசிராந்தையார் | : தீயவர் சிலரும் வறியவர் சிலரும் தோன்றத்தான் வேண்டும் என்று ஏன் சொன்னேன் எனில், இவ்வாறு தீயவர் சிலரும் நாட்டில் தோன்றினால், வாழ்க்கையில் சுவைப் பகுதி இது, சுவையற்ற பகுதி இது என்று உணர முடியும். அதுமட்டுமன்று, அப்போதுதானே இன்னும் என்ன வேண்டும் மக்களுக்கு என்று நமக்குப் புரியும். |
| மேற்படியார் | : எல்லாரும் நல்லவர், எல்லாரும் செல்வர் ஆகிவிட்டார்கள். அவர்கட்கு இன்னும் என்னெ வேண்டும்? |
| பிசிராந்தையார் | : வல்லமை வேண்டும். |

**(காட்சி 7, பக்கம் 36)**

I. இச்சூழலில் வெளிப்படும் பிசிராந்தையாரின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

II. இச்சூழலில் காணப்படும் **படிப்பினை** ஒன்றனை எழுதுக? (2 புள்ளி)

III. ‘***மெலிந்த உள்ளம் வெம்மையைத் தாங்காது***’ என்பதன் சூழலுக்கேற்ற பொருள் யாது? (2 புள்ளி)

IV. இச்சூழலுக்கான **காரணம்** யாது? (3 புள்ளி)

**விடைகள் :**

**அ)** சீரிய சிந்தனையாளர்,

நாட்டு மக்கள் நலனில் அக்கறை கொண்டவர்,

உலக வாழ்க்கையில் இயல்பை அறிந்தவர்.

ஆ) எதையும் தீர ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும் / ஆட்சியாளர்கள் மக்கள் நலனில் அக்கறை கொள்ள வேண்டும்.

இ) ***மெலிந்த உள்ளம் வெம்மையைத் தாங்காது –***

மெல்லிய உள்ளம் கொண்ட பாண்டிய நாட்டு மக்கள் பெருந்துன்பத்தைத் தாங்க மாட்டார்கள்.

ஈ)

- மேற்படியாரும் பிசிராந்தையாரும் நாட்டு மக்களின் நிலை குறித்துப் பேசிக் கொண்டிருக்கின்றனர்.
- அப்போது ஓடையைக் கடக்கப் போடப்பட்டிருந்த பலகை முறிந்து யானை ஒன்று ஓடையில் விழுகிறது.
- அதைச் சான்றாகக் காட்டி நாட்டின் மக்களின் நிலையைத் தெளிவாக விளக்குகிறார் பிசிராந்தையார்.

**பயிற்சி 4**

**காட்சி 7 : மாறுவேடத்தில் வந்த சோழ இளவரசன்**

- ஆலடியில் பிசிராந்தையாரைச் சந்தித்த சோழ நாட்டான் கோப்பெருஞ்சோழனின் ஆட்சியைக் குறை கூறுதல்.
- குறை சொன்னவனிடம் சோழ மன்னன் ஆட்சி பிழையில்லாத் தன்மையை உணர்த்துதல்.
- தன் அன்னையைப் பற்றி கேள்வி எழுப்பிய பிசிராந்தையாரிடம் சினம் கொள்ளுதல்.

கீழ்க்காணும் பகுதியை வாசித்து, தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

| | |
|---|---|
| பிசிராந்தையார் | :முகமூடியைக் கிழித்துக் கொண்டீர் இளவரசரே! பண்பு வேறுபாட்டால் தந்தைக்கு மாசு ஏற்படுத்த முனைந்து விட்டீர். **ஆலின் மேலிருந்து எச்சமிடும் பறவைபோல** உங்களின் மனநிலை திருந்த வேண்டும். அல்லது பொறுத்திருக்க வேண்டும். குறைபாடுள்ளது உலகம். பல திருத்தங்களைப் பெறவேண்டும் அது. அதற்கான கருவூலம் உன் தந்தையார் சோழ மன்னர். |
| இளவரசன் | :புலவரே, நீங்கள் தூக்குமேடை நோக்கி வர வேண்டு மல்லவோ? |
| பிசிராந்தையார் | :வருகிறேன். |
| இளவரசன் | :அமைச்சரைக் காக்க வேண்டுமல்லவோ? |
| பிசிராந்தையார் | :தீர்ப்பு அறத்தராசில் வைக்கப்பட்டுவிட்டது. தீர்ப்புக் கூறுவோன் உரிமையில் தலையிட எவனுக்கும் உரிமையில்லை. தலையிடுவது இழி செயல் ஆகும். |

**(காட்சி 7, பக்கம் 41)**

I. இச்சூழலில் வெளிப்படும் பிசிராந்தையாரின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

II. இச்சூழலில் காணப்படும் **உத்தி** ஒன்றனை எழுதுக? (2 புள்ளி)

III. **‘ஆலின் மேலிருந்து எச்சமிடும் பறவைபோல’** என்பதன் சூழலுக்கேற்ற பொருள் யாது? (2 புள்ளி)

IV. இச்சூழலுக்கான **காரணம்** யாது? (3 புள்ளி)

**விடைகள் :**

**அ)** மதிநுட்பம் கொண்டவர்,

பிறர் நலனில் அக்கறை கொண்டவர்,

கோபெருஞ்சோழனின் மீது நல்லெண்ணம் கொண்டவர்.

ஆ) உரையாடல் உத்தி.

இ) **ஆலின் மேலிருந்து எச்சமிடும் பறவைபோல –**

கோப்பெருஞ்சோழனின் ஆட்சியில் இருந்துகொண்டே அவரையே இழிவாகப் பேசும் இளவரசன்

ஈ)

- ஆலடியில் பிசிராந்தையாரைச் சந்தித்த சோழ நாட்டான் கோப்பெருஞ்சோழனின் ஆட்சியைக் குறை கூறுதல்.
- குறை சொன்னவனிடம் சோழ மன்னன் ஆட்சி பிழையில்லாத் தன்மையை உணர்த்துதல்.
- தன் அன்னையைப் பற்றி கேள்வி எழுப்பிய பிசிராந்தையாரிடம் சினம் கொள்ளுதல்

**பயிற்சி 5**

**காட்சி 8 : கொலை செய்ததை ஒப்புக் கொண்ட தூயன்**

- கொலை செய்ததாக ஒப்புக் கொண்டவன் அதற்கான எந்தத் தகவலையும் சொல்லவில்லை.
- மன்னர் கொலைக்கான காரணம் தெரிந்தவர்கள் முன் வந்து சொல்லி அமைச்சர் உயிரைக் காப்பாற்ற வேண்டுகிறார்.
- அப்போது மேலும் ஒருவன் வந்து தான்தான் கொலை செய்ததாக ஒப்புக் கொள்கிறான். அவனும் காரணம் சொல்ல மறுக்கிறான்.

கீழ்க்காணும் பகுதியை வாசித்து, தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

| | |
|---|---|
| அரசன் | :இப்படிக் கூறினால் உண்மை எப்படி தண்டிப்பது? முன்னர் அவர் சொன்னார், நானே கொலை செய்தேன் என்று.<br><br>இந்நாள் நீர் சொல்லுகிறீர் 'நானே கொலை செய்தேன் என்று. இதுபோல் இன்னமும் இருக்கக்கூடுமே! எதிர் வந்த உம் சொல்லிலும் பொய்மை இருக்கக் கூடுமே! உண்மை விளக்கம் ஆக வேண்டாமா? இப்படி எல்லாம் நீண்டு கொண்டே போனால் நாம் அமைச்சரையல்லவா இழக்க நேருகின்றது? |
| பிசிராந்தையார் | :அமைச்சருக்கு ஒன்றானால் அரசர் வாழ மாட்டார். அறுதியிட்டுக் கூறுகிறேன். அரசருக்கு ஒன்றானால் நான் உயிர் வாழேன். இதோ செத்துக் கொண்டிருக்கிறார்கள் அன்னை அனிச்சையார். அன்பரே, **திரையை விலக்குங்கள்**. நடத்துங்கள், நீங்கள் கண்டதை அப்படியே நடத்துங்கள். நாடகத்துள் நாடகத்தை மக்கள் ஆவலாய் எதிர்பார்க்கின்றார்கள். பாவாணர்கள் பதைக்கின்றார்கள், பாட்டு எழுத! |

I. இச்சூழலில் வெளிப்படும் அரசனின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

II. இச்சூழலில் காணப்படும் **வாழ்வியல் சிந்தனை** ஒன்றனை எழுதுக? (2 புள்ளி)

III. **'திரையை விலக்குங்கள்'** என்பதன் சூழலுக்கேற்ற பொருள் யாது? (2 புள்ளி)

IV. இச்சூழலுக்கான **காரணம்** யாது? (3 புள்ளி)

**விடைகள் :**

**அ)** தீர ஆராய்ந்து முடிவு எடுப்பவர்,

நீதியை நிலை நாட்டுபவர்,

பிறர் நலனில் அக்கறை கொண்டவர்.

ஆ) எந்த நிலையிலும் தீர ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டும்.

இ) **திரையை விலக்குங்கள் –**

கொலையாளிகளை மனத்தில் மறைத்து வைத்துள்ள கொலைக்கான காரணத்தை வெளிப்படையாகக் கூறச் சொல்வது

ஈ)

- கொலை செய்ததாக ஒப்புக் கொண்டவன் அதற்கான எந்தத் தகவலையும் சொல்லவில்லை.
- மன்னர் கொலைக்கான காரணம் தெரிந்தவர்கள் முன் வந்து சொல்லி அமைச்சர் உயிரைக் காப்பாற்ற வேண்டுகிறார்.
- அப்போது மேலும் ஒருவன் வந்து தான்தான் கொலை செய்ததாக ஒப்புக் கொள்கிறான். அவனும் காரணம் சொல்ல மறுக்கிறான்.

**பயிற்சி 6**

**காட்சி 10 : பச்சைக்கிளியை மணக்க எண்ணும் ஆசையைத் தாயிடம் தெரிவித்தல்**

- பச்சைக்கிளியை மணக்கும் எண்ணத்தைத் தன் தாயிடம் தெரிவிக்கிறான் தூயன்.
- முன்பொரு சமயம் உதவி செய்ததை வைத்து அது அன்பு எனத் தவறாக எண்ண வேண்டாம் என்கிறாள்.
- தூயனின் அம்மா பச்சைக்கிளியின் எண்ணத்தை ஆராந்து முடிவு எடுக்கும்படி அறிவுரை சொல்கிறார்.

கீழ்க்காணும் பகுதியை வாசித்து, தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

| | |
|---|---|
| தூயன் | :எனக்கும் **அந்த ஐயப்பாடு உண்டு.** ஆயினும் அவள் பெற்றோர் என் மீதில் அன்புடையவர்கள் அம்மா. சென்ற திங்கள் கூடச் சென்று அவர்கள் வீட்டில் விருந்துண்டேனே. |
| தாய் | :விருந்திட்டார்கள். வந்த விருந்தினரை வருக என அழைத்து உண்பித்தல் தமிழர் பண்பாடு. அதுகொண்டு நீ பெண் கொடுக்க ஒப்பிவிட்டதாக எண்ணிவிடலாகாது. |
| தூயன் | : அவர்கள் ஒப்பக்கூடுமே! |
| தாய் | : தப்பவும் கூடுமே! ஆராய்ந்து முடிவு செய். |
| தூயன் | :பச்சைக்கிளிக்கும் எனக்கும் திருமணம் என்று செய்தி அனுப்புகிறேன். வந்து சேருங்கள் அப்பாவும் நீங்களும் என்ன? |
| தாய் | : நன்றாய்! |
| தூயன் | :அப்பா ஊரில் இல்லை. வந்தால் அவரிடம் சொல்லுங்கள். அம்மா! பாண்டிய நாட்டுக்கு நான் போயிருப்பதாக! |

**(காட்சி 10, பக்கம் 53)**

I. இச்சூழலில் வெளிப்படும் தூயனின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

II. இச்சூழல் இடம்பெற்ற **இடப்பின்னணி** யாது? (2 புள்ளி)

III. **‘அந்த ஐயப்பாடு உண்டு’** என்பதன் சூழலுக்கேற்ற பொருள் யாது? (2 புள்ளி)

V. இச்சூழலுக்கான **காரணம்** யாது? (3 புள்ளி)

**விடைகள் :**

**அ)** பச்சைக்கிளியின் மீது அன்பு கொண்டவன்,

தன் முடிவில் உறுதியாய் இருப்பவன்,

தாயின் மீது மதிப்புக் கொண்டவன்.

ஆ) சோழ நாட்டில் ஒரு வீடு.

இ) **'அந்த ஐயப்பாடு உண்டு'** –

பச்சைக்கிளி தன்னை மணக்க ஒப்புதல் தெரிப்பாளா என்ற ஐயம்

ஈ)

- பச்சைக்கிளியை மணக்கும் எண்ணத்தைத் தன் தாயிடம் தெரிவிக்கிறான் தூயன்.
- முன்பொரு சமயம் உதவி செய்ததை வைத்து அது அன்பு எனத் தவறாக எண்ண வேண்டாம் என்கிறாள்.
- தூயனின் அம்மா பச்சைக்கிளியின் எண்ணத்தை ஆராந்து முடிவு எடுக்கும்படி அறிவுரை சொல்கிறார்.

**பயிற்சி 7**

**காட்சி 2 : இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்ட மக்களைக் காணச் செல்லல்**

- பாண்டிய நாட்டில் இயற்கை சீற்றம்.
- மக்கள் நிலை காண மேற்படியார், பிசிராந்தையார், மன்னன் அறிவுடை நம்பி செல்கின்றனர்
- செல்லும் வழியில் இயற்கை சீற்றத்தில் அலைக்கழிக்கப்பட்ட செய்தியை நகைச்சுவையாக பேசிக் கொண்டு செல்கின்றனர்

கீழ்க்காணும் பகுதியை வாசித்து, தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

| | |
|---|---|
| பிசிராந்தையார் | :துன்பத்திற்கு மேல் துன்பம்! |
| அரசர் | :இங்கே! |
| பிசிராந்தையார் | :மேற்படியாரின் நகைச்சுவை துன்பத்தை நீக்கிவிடுகின்றது. |
| மேற்படியார் | :யானையும் போனதே நடக்கவும் ஆனதே ஐயா. |
| பிசிராந்தையார் | :நட்போம். மக்கள் நிலை என்ன ஆயிற்றோ? |
| மேற்படியார் | :உங்களை ஒன்று கேட்க எண்ணுகிறேன். காற்று மழை வலுத்தன. நாட்டு மக்கள் இல்லை? நான் இல்லையா? நீர் என்ன ஆராய்ச்சி மணியை அசைக்கக் கிளம்பியது? நீவிர்தாம் நாட்டு மக்களைக் காப்பவரோ? |
| அரசர் | :வேறு யார் புலவரே! பாண்டிய நாட்டில் எல்லாரும் நல்லவர்; எல்லாரும் செல்வந்தர் என்ற நிலை ஏற்பட அல்லும் பகலும் தொண்டு செய்தது ஓர் ஆற்றல்! என் அறிவுக்கு மெருகு – என் ஆற்றலுக்கு ஊட்டம் இவர்கள்! எவரை நான் இழக்க முடியாதோ அவரை நான் இழந்துவிடவில்லை. காற்று மழை ஏமாந்தன. **மீண்டும் பெற்றேன் என் ஆற்றலை** – அறிவை. |

**(காட்சி 2, பக்கம் 9,10)**

i) இச்சூழலில் வெளிப்படும் அரசனின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

ii) இச்சூழலில் இடம்பெற்ற **மொழிநடை** யாது? (2 புள்ளி)

iii) **'மீண்டும் பெற்றேன் என் ஆற்றலை'** என்பதன் சூழலுக்கேற்ற பொருள் யாது? (2 புள்ளி)

VI. இச்சூழலுக்கான **காரணம்** யாது? (3 புள்ளி)

**விடைகள் :**

**அ)** பிசிராந்தையாரின் மீது நம்பிக்கை கொண்டவர்,

பிறரைப் போற்றுபவர்

ஆ) இசைமொழி

இ) **‘மீண்டும் பெற்றேன் என் ஆற்றலை –**

மன்னன் அறிவுடை நம்பியின் நம்பிக்கைக்குப் பாத்திரமான பிசிராந்தையார் காற்று மழையில் தப்பிப் பிழைத்தது

ஈ)

- பாண்டிய நாட்டில் இயற்கை சீற்றம்.
- மக்கள் நிலை காண மேற்படியார், பிசிராந்தையார், மன்னன் அறிவுடை நம்பி செல்கின்றனர்
- செல்லும் வழியில் இயற்கை சீற்றத்தில் அலைக்கழிக்கப்பட்ட செய்தியை நகைச்சுவையாக பேசிக் கொண்டு செல்கின்றனர்